# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 06.08.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 11974/SCIC/2025**

திரு.ந.ராமசாமி (எ) குணசேகரன், - மேல்முறையீட்டாளர்
த/பெ.திரு.அ.நரசிங்கப் பெருமாள்
கதவு எண்.6-2-9, காந்திஜி தெரு,
மேலச் சொக்கநாதபுரம்
போடிநாயக்கனூர் தாலுக்கா
தேனி மாவட்டம்-625 582
Phone: 96773 42485.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
போடி நாயக்கனூர்
தேனி மாவட்டம்-625 513 .

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **07.05.2025** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 29.05.2025 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 03.06.2025 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 25.06.2025 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 07.07.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 07/05/2025 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர் அலுவலகம், போடிநாயக்கனூர் அவர்களுக்கு அனுப்பி, அதில் “தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், புல எண்.220/5-ல் போடிநாயக்கனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1483/1987, 3290/1995-ல் பதியப்பட்ட ஆவணங்களில் எழுதி கொடுத்தவர், எழுதி வாங்கியவர் ஆகியோர்களின் விரல்

ரேகை பதிவின் நகல் கொடுத்து உதவும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்." எனக் கோரியுள்ளார்.

2. இன்றைய (06/08/2026) ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணையின் போது மனுதாரர் திரு.ந.இராமசாமி (எ) குணசேகரன் அவர்கள் ஆஜராகவில்லை. ஆணையத்தால் மனுதாரருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை 'Deceased' என அஞ்சல் துறையினரால் குறிப்பிடப்பட்டு, ஆணையத்திற்கு திருப்பப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.ப.கார்த்திகைராஜ், சார்பதிவாளர், போடிநாயக்கனூர் சார்பதிவகம் அவர்கள் ஆஜராகி மனுதாரரின் இதே பொருண்மை கொண்ட சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான மனுவின் அடிப்படையில் வழக்கு எண்.SA 10587/SCIC/2025 ஆணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 30/07/2026 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்ததோடு, மனுதாரருக்கு ஏற்கனவே 29/05/2025 மற்றும் 30/07/2025 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக ஆவணங்களின்படியான தகவல் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். **மனுதாரருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை, அஞ்சல் துறையினரால் 'Deceased' எனக் குறிப்பிடப்பட்டு ஆணையத்திற்கு திருப்பப்பட்டுள்ளது. மேலும், மேற்சொன்ன 30/07/2026 தேதிய ஆணையத்தின் விசாரணையின் போதும் மனுதாரர் ஆஜராகவில்லை. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 11974 /SCIC/2025</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
போடி நாயக்கனூர்
தேனி மாவட்டம்-625 513 .

## மேல்முறையீட்டாளர்

திரு.ந.ராமசாமி (எ) குணசேகரன்,
த/பெ.திரு.அ.நரசிங்கப் பெருமாள்
கதவு எண்.6-2-9, காந்திஜி தெரு,
மேலச் சொக்கநாதபுரம்
போடிநாயக்கனூர் தாலுக்கா
தேனி மாவட்டம்-625 582
Phone: 96773 42485.

RG/Sr.PC